25th February 1969]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) வாக்காளர் பட்டியலைக் குறிப்பிட்ட காலத்திற்குள் அச்சிட்டுக் கொடுப்பதில் அச்சகத்தினரின் திறமையைப் பொறுத்து, அச்சகத்தினரின் தேர்வினையும் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய பணியின் அளவினையும் அரசாங்கம் முடிவு செய்து வருகிறது. இதனை மாவட்ட ஆட்சியாளர்கள், சென்னை மாநகராட்சிப் பொறுப்பாளர் (Commissioner) ஆகியோரைக் கலந்து அரசாங்கம் முடிவு செய்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இவைகளுக்கு டெண்டர் கேட்கப்படுகிறதா? யாரேனும் குறைவாக டெண்டர் கொடுத்தால் அந்த அச்சகத்தாருடைய கோரிக்கை கவனிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 40, 50க்கு மேற்பட்ட அச்சகங்களில் அச்சடிக்கப்படுகின்றன. ஆங்காங்கு எந்த அளவிற்கு அச்சகத்திற்கான கூலி நிர்ணயிக்கப்படுகிறதோ இதே அளவுக்கு எல்லா இடங்களிலும் அச்சடிக்கப்படுகின்றன.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த வாக்காளர் பட்டியல் அடிப்பதில் தவறாக அச்சடிக்கப்படுகின்றன. பெயர்களில், ஜாதிகளில் மாறுதல்கள் இருக்கின்றன. இப்படி வழக்கமாக தவறு செய்யும் அச்சகங்களுக்கு மீண்டும் கொடுக்கப்படுகிறதா ? கொடுக்காமல் நிறுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வாடிக்கையாகத் தவறு செய்துகொண்டிருந்தால் அந்த அச்சகத்திற்குக் கொடுப்பது நிறுத்தப்படும்.

திரு. எம். எத்திராஜுலு : மாவட்ட அச்சகங்களுக்கு வேலை கொடுப்பதற்கு முன்பு மாவட்ட கலெக்டரின் அனுமதி பெற்று கொடுக்கப்படுகிறதா ? அல்லது நேரடியாக சர்க்காரே கொடுக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாவட்டத் தலைவர்களைக் கலந்து அந்தத் தேர்வு செய்யப்படுகிறது.

Encroachment on riverside porambokes

* 39 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether Left Communists have encroached upon riverside poramboke lands in Kozhumam village and other areas of Udumalpet, Coimbatore district ;

(*b*) whether the villagers have made any complaint to the Hon. the Chief Minister; and

(*c*) if so, the action taken thereon?

[25th February 1969

ஆற்றுப் புறம்போக்கு நில ஆக்கிரமிப்புகள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த கொழுமம் கிராமத்திலும், இதர பகுதியிலும் இடது கம்யூனிஸ்டுகள் ஆற்றுப் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்தனரா?

(இ) இதுபற்றி முதலமைச்சருக்கு கிராமத்து மக்கள் புகார் செய்தனரா?

(உ) ஆமெனில், எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) & (இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே. இந்த உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த கொழுமம் கிராமத்தில் இடதுசாரி கம்யூனிஸ்டுகள் ஆற்றோர நிலப்பரப்பை ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்றும் அதை அரசு அப்புறப்படுத்தவில்லை என்று ஒரு புகார் எனக்கு வந்திருக்கிறது. இங்கு மட்டுமல்ல, இன்னும் பல இடங்களில் இடதுசாரி கம்யூனிஸ்டுகள் முக்கியமான இடங்களில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். அதை அகற்றும் வகையில் இந்த அரசு என்ன கொள்கை வைத்திருக்கிறது? கையாளுகிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கொழுமம் என்ற கிராமத்தில் ஆக்கிரமிப்பு ஏற்பட்டிருக்கிறதா என்று கோயமுத்தூர் டீ.ஆர்.ஓ.-வை விசாரித்ததில் கொழுமத்திலோ சுற்றுப்புற கிராமத்திலோ ஆற்றோர புறம்போக்குகள் அப்படியில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அத்தோடு கொழுமத்திற்குப் பக்கத்தில் குமாரலிங்கம் என்ற கிராமத்தில் ஒரு ஏக்கர் நிலத்தில் ஒருவர் ஆக்கிரமித்திருப்பதாகவும் அவர் பெயர் மாரிமுத்து என்றும் அவர் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் என்றும் அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். பொதுவாக அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவும் ஆட்சேபணை இல்லாமல் அதை அளிப்பதற்கும் அந்தந்த நிலைமைக்கேற்ப தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் ராஜபாளையம் பகுதியில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆக்கிரமித்து இருக்கிறார்கள் என்ற தகவல் அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: ஆக்கிரமிப்பில் காங்கிரசா, கழகமா, கம்யூனிஸ்டா என்று இல்லை. பழைய சர்க்கார் தவறான கொள்கையை அனுசரித்து வந்தது. அதுதான் உண்மையான காரணம். இரண்டு லட்சம் ஏக்கருக்கு மேல் தரிசு நிலங்கள்

25th February 1969]

உள்ள இடங்களில் நிலமற்றவர்களுக்கு அவற்றை வழங்கும் கொள்கையில் துரிதத்தையும் விரைவையும், காலத்திற்கு ஒத்த போக்கையும் காட்டாமல் ஏதோ சமாதானம் சொல்லிய காரணத்தால் பல இடங்களில் அத்தகைய ஆக்கிரமிப்புகள் நடைபெற்றன. ஆக்கிரமிப்பு எல்லாமே அகற்றப்படவேண்டுமென்று கூறுவதும் சரியல்ல. ஆட்சேபணைக்குரிய ஆக்கிரமிப்புகளையெல்லாம் அகற்றினால் போதும். கடந்த ஆண்டு மட்டும் 22 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களை, வீட்டு மனைகளை புதிய அரசு ஏழைகளுக்கு நிலமற்றவர்களுக்கு அரிஜன மக்களுக்கு அசைன்மெண்டு செய்து கொடுத்திருக்கிறது. இந்த ஆண்டுக்கு 50 ஆயிரம் ஏக்கர் நிலத்தை எடுத்துப் பல்வேறு மாவட்டங்களிலும் வேகமாகவும் துரிதமாகவும் நிலமற்ற ஏழைகளுக்கு அளிப்பதில் ஈடுபட்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: இந்த புறம்போக்கு நிலங்களில் தேவையற்றது, தேவையுள்ளது எவை என்று பரிசீலனை செய்து அதற்கு தனியாக ரிகார்டு தயார் செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியில்லையென்றால் அதைத் தயார் செய்ய அரசு உத்திரவிடுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: எப்போதுமே அது சம்பந்தமான ரிகார்டுகள் இருக்கின்றன. புறம்போக்குகளில் விவசாயப் புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு குளத்துமேட்டு புறம்போக்கு என்று பல்வேறு பகுதிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கிராம சமூக நலனுக்குப் பயன்படும் புறம்போக்கிருக்கிறது. குளத்துக்குள்போய் கூட நீர்ப்பரப்பில் பயிர் செய்கிறார்கள். சமுதாயத்திற்குத் தேவையானவை போக பாக்கியுள்ளவை நிலமற்றவர்களுக்கு அசைன் செய்யப்படுகின்ற நிலைமை இருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து இதற்கு முந்தைய அரசு கடைப்பிடித்த தவறான கொள்கை காரணமாக அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். தவறான கொள்கையில் எவ்வளவு ஜாரி செய்திருக்கிறார்கள்? என்ன கொள்கை அடிப்படையில் ஜாரி செய்யப்பட்டது என்று சொல்லமுடியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தவறாக என்றால் மாண்புமிகு உறுப்பினர் கோபித்துக் கொள்ளக் கூடாது. காலத்திற்கு உகந்த மாறுதல்களைக் கடைப்பிடிக்கவில்லை என்று சொன்னேன். உதாரணத்திற்கு சொல்லவேண்டுமென்றால், சென்னையில் இருக்கிற புற நகர்ப் பகுதிகளில் தாம்பரத்திலிருந்து எண்ணூர் வரையில் உள்ள இடங்களில் 50,000 இடங்களில் குடிசை போட்டிருக்கிறார்கள். நான்கு செண்ட் 5 செண்ட் என்று பல ஊர்களில் வில்லிவாக்கம், திருவொற்றியூர், மாதவரம், பல்லாவரம் போன்ற புறநகரங்களில் 50 ஆயிரம் குடிசைகள் போட்டிருக்கிறார்கள். அவை அனைத்தையும் அகற்ற முடியவில்லை. இப்போதுள்ள போர்டு

[25th February 1969

ஸ்டாண்டிங் ஆர்டர் அதற்குக் குறுக்கே இருக்கிறது. 750 சதுர அடிக்கு மேல் அப்படி ஒப்படைக்கக் கூடாது என்று சட்டத்தில் இருக்கிறது. பதினைந்து வருஷமாக ஒவ்வொருவரும் திரும்பத் திரும்ப விண்ணப்பிப்பதும் அதற்குக் கொடுப்பதற்கில்லை என்றும் ஆட்சேபணைக்குரியது என்றும் பதில் சொல்லப்பட்டும் வந்திருக்கிறது. கொடுக்கவும் முடியவில்லை. வெளியேற்றவும் முடியவில்லை. கிராமங்களிலிருந்து வேலையில்லாமல் நகரத்திற்கு வந்திருக்கிறார்கள். அந்தப் பிரச்னை நமக்கு ஒரு அறைகூவலாக இருக்கிறது. அதற்காகத்தான் விதிமுறைகளை மாற்றி இந்த அரசாங்கம் ரெவின்யூ போர்டுக்குப் போவதைத் தடுத்து நடவடிக்கைகளை துரிதப்படுத்தியது என்று கூறினேனே தவிர வேறு ஒன்றுமில்லை.

மிஸ்டர் சேர்மன் : இது கோயமுத்தூர் பற்றிய கேள்வி. கனம் உறுப்பினர் ராஜபாளையம் போனார். இவர் எங்கெங்கோ போகிறார். (சிரிப்பு)

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் முந்தைய அரசின் முடிவு என்று சொன்னார்கள். முன்னாள் இருந்த அமைச்சரவை கொண்ட அரசா, காங்கிரஸ் அமைச்சரவையா என்று அறிய விரும்புகிறேன். இந்த மந்திரி சபை புறம்போக்கு விஷயத்தில் சாதாரணமாக நடைப்பாதை, புறம்போக்கு, ஆற்றுப் புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு ஆகியவற்றை யாருக்கும் அடமானம் செய்வதில்லை என்ற திடமான உறுதியை சர்க்கார் கடைப்பிடிக்குமா? தரிசு புறம்போக்கு மட்டும் அசைன்மெண்ட் செய்வது என்ற கொள்கை ஸ்திரமாக கடைப்பிடிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எல்லா காரியங்களிலும் இந்த அரசாங்கத்திற்கு ஸ்திரத் தன்மை உண்டு. கொஞ்சமும் கவலைப்படவேண்டியதில்லை. அதை நல்லவகையில் உறுதி செய்கிறேன்.

திரு. கே. எஸ். மணி : தஞ்சையில் நடைபெற்ற விவசாய மகாநாட்டில் ஆறு, குளம் போன்ற இடங்களில் உள்ள புறம்போக்கை ஆக்கிரமிப்பு செய்திருப்பதை உடனடியாக அகற்ற வேண்டுமென்றும் அதற்குத் தனி அதிகாரி நியமிக்கவேண்டுமென்றும் எடுக்கப்பட்ட முடிவு இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. இந்த அதிகாரியை நியமித்து செயல்பட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கண்டிப்பாக அந்த எண்ணம் அரசாங்கத்திற்குண்டு. மதிப்பிற்குரிய உறுப்பினர் சொல்லியது உண்மை, தஞ்சை மாவட்டத்தில் அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் அந்த யோசனையை செயல்படுத்த முன்வரும்.

25th February 1969]

Encroachments on the pathways, porambokes, etc., in certain Municipalities

*40 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that temples, buildings and shops are being built on the pathways and poramboke lands in all the Municipalities including Madurai; and

(*b*) if so, the action taken thereon?

நகராட்சிகளில் சாலே, புறம்போக்கு ஆகியவற்றில் வெளவுதல்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மதுரை உட்பட எல்லா நகரசபைகளும், பாதைகள், புறம்போக்குகள் ஆகியவற்றில் (1) கோவில்கள், கட்டிடங்கள் கட்டு வதையும், (2) கடைகள் வைப்பதையும் அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) மதுரையிலும், ஏனைய நகராட்சிகளிலும் மற்றும் சென்னை மாநகரிலும் சாலேகள், தெருக்கள், புறம்போக்குகள் சிலவற்றில் சாலே ஓரக் கோயில்கள், கடைகள் முதலியவற்றைக் கட்டியிருப்பதன் மூலமாக ஆக்கிர மிப்புகள் நடைபெற்றிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியும்.

(இ) கண்டுபிடிக்கப்பட்ட ஆக்கிரமிப்புகளைப் பொறுத்த வரை, ஒவ்வொரு ஆக்கிரமிப்பின் தகுதிக்கேற்றவாறு ஏற்புடைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, என் ஊரில் தேனியில் மட்டும் 1,352 ஆக்கிரமிப்புகள் இருப்பதாக முனிசிபல் ரிப்போர்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பத்துப்பன்னிரண்டு ஆண்டுகளாக அவை இருக்கின்றன. பன்னிரண்டு வருஷமாக அரசுக்கு அவ்வப்போது எழுதிக்கொண்டு வருகிறார்கள். திண்டுக்கல்லிலும் மதுரையிலும் அப்படி ஆயிரக்கணக்கான ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் இடைஞ்சலாக பல இருக்கின்றன. அவற்றை அகற்ற அரசாங்கம் நடவடிக்கை துரிதமாக எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதுபோன்ற ஆக்கிர மிப்புகளில் இருக்கிற சட்ட அம்சம் என்னவென்றால் அந்தந்த முனிசிபாலிடிகள் அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்கள்தான் அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அவை Land Encroachment Act, Madras Public Premises Eviction of Unauthorised Occupants மூலம் நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருக்கிறது சென்னையைப் பொறுத்தவரையில் கார்ப்பரேஷனும், மதுரை